[14th December 1961

THE HON. SRI V. RAMAIAH : அந்த விவரங்களை இந்த அறிக்கையிலே கொடுத்திருக்கிறேன். மின்சார சக்தியைக் கொடுப்பதாக ஒப்பந்தம் இல்லை. உற்பத்தியாகக் கூடிய பூரா மின்சக்தியும் நமக்குத்தான் கிடைக்கும்.

Electricity Supply (Tariff charges)

* 2318 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ம் வருஷம் மார்ச்சு மாதம் 4-ந் தேதியில் 581-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி அண்டை ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படும் மின்சக்தி என்ன விலைக்குக் கொடுக்கப்படுகிறது?

(இ) பிற மாநிலங்களிலிருந்து பெறும் மின்சக்தியின் விலை எவ்வளவு?

(உ) இதனால் நமக்கு ஏற்படும் நஷ்டம் எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (அ), (இ) & (உ) The attention of the hon. Member is invited to the answer [a] placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : மற்ற மாநிலங்களில் இருந்து பெறுகின்ற மின்சார சக்திக்கு நாம கொடுக்கின்ற தொகை அதிகமானது இல்லையா? அவர்களிடம் இருந்து நாம் வாங்குவதைவிட நாம் குறைவான விலைக்குக் கொடுக்கிறோம் என்பது உண்மையா? இப்படி ஏன் அதிகவிலை கொடுக்க வேண்டும்?

THE HON. SRI V. RAMAIAH : அந்த மாநிலத்தில் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு கிரயம் ஆகிறதோ அதைத்தான் நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

All-India electricity grid

* 2319 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் அகில இந்திய மின்சார 'கிரிட்' ஏற்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் கூறியது மாநில சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

(இ) அப்படியாயின், மாநில சர்க்காரின் முடிவென்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Electricity workers (dispute)

* 2320 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Electricity Board has approached the Tamilnad Electricity Workers' Federation to solve the dispute between the Board and the workers by any negotiation with representatives of the Federation;

---

[a] Printed as Appendix V on pages 859–860 infra.